## பாடம்- 23 வனாந்திரத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் (யாத் 15-17)

முறுமுறுக்கிறவர்களை யாரும் மெச்சிக்கொள்ள மாட்டார்கள். முறுமுறுப்பதும், புகார் கூறுவதும் இயற்கையாகவே இருக்கின்ற குணாதிசயம். இதை நம்முடைய பிள்ளைகளிடமும் காணலாம். அவர்கள் தங்களுடைய கடினமான சூழ்நிலைகள் அல்லது தங்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு, ஆரம்பத்தில் யார் மீதாவது பழி சுமத்துவார்கள்.

மற்றவரை பழி சொல்லுகின்ற இந்த சுபாவம் ஏதேனில் தொடங்கி இன்று வரை நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த பாடத்தில் இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய துன்பங்களுக்கு மோசேயே காரணம் என பழி சொல்லி குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் உண்மையிலே அவர்கள் தேவனிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கிறார்கள். மோசே, அவர்கள் தேவனை முழுமையாக நம்புவதற்கு தவறிவிட்டார்கள் என்பதை நினைவுபடுத்துகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தை கடந்த பிறகு,மோசே அவர்களை வெப்பமான வனாந்திரத்தின் வழியாக சீனாய் மலையை நோக்கி வழி நடத்துகிறார். அவர்கள் மூன்று நாட்கள் வனாந்திரத்திலே தண்ணீர் கிடைக்காமல் நடந்தார்கள். எனவே எல்லாருக்கும் மிகுந்த தாகம் உண்டானது. முடிவிலே ஒரு குளத்திற்கு வந்தார்கள். ஆனால் அந்த தண்ணீர் குடிப்பதற்கு மிகவும் கசப்பாய் இருந்தது. அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து, ‘‘என்னத்தை குடிப்போம்?’ என்றார்கள்.

மோசே ஜெபித்தான். அப்பொழுது கர்த்தர் அவனுக்கு ஒரு மரத்தை காண்பித்தார். அவன் அதை தண்ணீரில் போட்டவுடனே அது மதுரமான தண்ணீராயிற்று. அப்போது தேவன், இஸ்ரவேலரை நோக்கி, ‘‘நீங்கள் என் சத்தத்தை கவனமாய் கேட்டு, என் கட்டளைகளை கைக்கொண்டால் நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உங்களுக்கு வரப் பண்ணேன். நானே உங்கள் பரிகாரியாகிய கர்த்தர்’’ என்றார்.

அங்கிருந்து சென்று, அவர்கள் பன்னிரெண்டு நீருற்றுகளும், எழுபது பேரீச்சமரங்களும் இருந்த இடத்தில் பாளயமிறங்கினார்கள். அங்கே ஒரு மாதம் இளைப்பாறி சீனாய் மலையை நோக்கி தங்கள்

பயணத்தை மறுபடியும் தொடர்ந்தார்கள். பயணத்தினால் சுய பரிதாபம் கொண்டு மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து, “நாங்கள் எகிப்திலே இறந்திருக்கலாம். ஆம், நாங்கள் அங்கே அடிமைகளாய் இருந்தும், எங்களுக்கு சாப்பிட அதிகமான உணவுகள் இருந்தன. நீங்கள் எங்களை அங்கிருந்து புறப்படபண்ணி இந்த வனாந்திரத்திலே பட்டினியால் கொல்லும்படி அழைத்து வந்தீர்களே” என்றார்கள்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, “நான் இந்த மக்களின் முறுமுறுப்பை கேட்டேன். நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பத்ததை வருஷிக்கப்பண்ணுவேன் என்று அவர்களிடம் சொல். அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ, நடக்க மாட்டார்களோ என்று சோதிப்பேன். அப்போது நான் தான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள்” என்றார்.

அவர்கள் பார்த்த போது, மேகத்திலே தேவனுடைய மகிமையை கண்டார்கள். அப்போது மோசே இஸ்ரவேல் மக்களை நோக்கி, “நீங்கள் எனக்கும், ஆரோனுக்கும் விரோதமாக அல்ல, தேவனுக்கு விரோதமாகவே முறுமுறுத்தீர்கள். ஆனாலும் தேவன் அவைகளை கேட்டார். சாயங்காலத்தில் இறைச்சியை புசித்து, விடியற்காலத்தில் அப்பத்தால் திருப்தியாவீர்கள்” என்றான்.

அன்று சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக் கொண்டது, எனவே ஜனங்களுக்கு புசிப்பதற்கு இறைச்சி இருந்தது. விடியற்காலத்திலே அவர்கள் பாளயத்தை சுற்றி பனி பெய்து தரையை மூடியிருக்க கண்டார்கள். பனி நீங்கிய பின் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய் தரையின் மீதெங்கும் கிடந்தது. ஜனங்கள் அதை கண்டு ஒருவரை ஒருவர் பார்த்து, ”இது என்ன என்றார்கள்?” பின் அதை அவர்கள் சாப்பிட்டார்கள்.

அதன் ருசி தேனிடபட்ட பணியாரத்திற்கு ஒப்பாயிருந்தது. அதை அவர்கள் அவித்தோ அல்லது சுட்டோ புசித்தார்கள்.

மோசே ஜனங்களிடம், “இது கர்த்தர் உங்களுக்கு புசிக்க கொடுத்த அப்பம். அவர் வாரத்தின் ஆறு நாட்கள் இந்த அப்பத்தை

வானத்திலிருந்து வருஷிக்கப்பண்ணுவார். முதல் ஐந்து நாட்கள் அவனவன் தன்தன் கூடாரத்திலிருக்கும் ஆத்துமாக்களின் தலைக்கு தக்கதாக ஒரு நாட்களுக்கு தேவையானதை தினமும் சேகரிக்க வேண்டும். ஆறாவது நாள் இரண்டு நாட்களுக்கு வேண்டியதை சேகரியுங்கள். இப்படியாக நீங்கள் ஓய்வுநாளுக்கு தேவையான உணவை சேகரிக்க வேண்டும். ஓய்வு நாளிலே இது காணப்படாது'' என விளக்கி கூறினான்.

சில ஜனங்கள் கர்த்தருடைய உத்தரவிற்கு கீழ்படியாமல் ஒரு நாளுக்கு தேவையான அளவை விட அதிகமாக சேகரித்தார்கள். மறுநாள் காலை அது பூச்சிபிடித்து நாற்றமெடுத்தது. ஆனால் ஆறாம் நாள் அதிகமாக அவர்கள் சேகரித்த போது இவ்விதமாய் நடக்கவில்லை. அது ஓய்வுநாளிலே சாப்பிடுவதற்கு ஏற்றதாயிருந்தது.

ஓய்வு நாளிலே ஜனங்களில் சிலர் அதை சேர்க்க புறப்பட்டார்கள் ஆனால் அங்கே ஒன்றுமில்லை. ஜனங்கள், ''இது என்ன?' என்று அர்த்தம் கொள்ளும்படியாக அந்த அப்பத்திற்கு, ''மன்னா'' என்று பேரிட்டார்கள். ஜனங்கள் வனாந்திரத்திலே இருந்த நாற்பது வருடமும் கர்த்தர் அவர்களுக்கு மன்னாவை புசிக்க கொடுத்தார்.

பிறகு இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலையினை நோக்கி தங்கள் பயணத்தை தொடர்ந்து, குடிக்க தண்ணீர் இல்லாத இடத்திலே பாளயமிறங்கினார்கள். மறுபடியும் ஜனங்கள் தேவனை நோக்கி கூப்பிடுவதற்கு பதிலாக, மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அவர்கள், ''எங்களுக்கு தண்ணீர் தர வேண்டும்'' என்று வாதாடினார்கள்.

மேலும் ''நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் தண்ணீர் தாகத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டு வந்தீர்?'' என்றார்கள். அதற்கு மோசே, "என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள்? கர்த்தரை ஏன் பரீட்சித்து பார்க்கிறீர்கள்?" என்றான். பின்பு அவன் கர்த்தரிடம், ''நான் இந்த ஜனங்களுக்கு என்ன செய்வேன். இவர்கள் என் மேல் கல்லெறிய பார்க்கிறார்களே'' என ஜெபித்து மன்றாடினான்.

அப்போது கர்த்தர், ''நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரையும், உன்னுடைய பணியாட்களையும் கூட்டிக்கொண்டு, ஜனங்களுக்கு

முன்னே நடந்து போ. ஒரேபிலே நான் உனக்கு முன்பாக கன்மலையின் மேல் நிற்பேன். நீ அந்த கன்மலையை அடி, அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்" என்று பதிலளித்தார்.

மோசே தேவன் தனக்கு கட்டளையிட்டபடி செய்து கன்மலையை அடித்தான். தண்ணீர் பீறிட்டு வந்தது. அது ஜனங்களுக்கும் அவர்களுடைய எல்லா ஆடுமாடுகளுக்கும் போதுமானதாய் இருந்தது. மோசே அந்த ஸ்தலத்திற்கு,'பரீட்சை' என்ற அர்த்தம் கொள்ளும்படியாக 'மாசா' என்றும் 'கலகம்' என்ற அர்த்தம் கொள்ளும்படி 'மேரியா' என்றும் பேரிட்டான்.

அந்த இடத்திலிருக்கும் போது, அமலேக்கியர் அவர்களை தாக்கினார்கள். மோசே, யோசுவாவிடம் யுத்தத்திற்கு மனிதரை ஒழுங்குபடுத்த சொன்னான். பிறகு மோசே மலையுச்சிலே தேவனுடைய கோலை தன் கையிலே பிடித்து கொண்டு நின்றான். மோசே தன் கையை ஏறெடுத்து தேவனை நோக்கி உதவிக்காக ஜெபிக்கையில் யோசுவா மேற்கொண்டான்.

ஆனால் அவன் கையை தாழவிடுகையில் அமலேக்கு மேற்கொண்டான்.

மோசேயின் கைகள் அசந்து போனதினால், அவன் ஒரு கல்லின் மீது உட்கார்ந்தான். ஆரோனும், ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து அவன் கைகளை சூரியன் அஸ்தமிக்கும் வரைக்கும் தாங்கினார்கள். அந்த நாளிலே யோசுவா அமலேயக்கியரின் இராணுவத்தை முறியடித்து வெற்றி பெற்றான்.

மோசே ஒரு பலீபிடத்தை கட்டி, அதற்கு 'கர்த்தர் என் ஜெயக்கொடியானவர்' என்று பேரிட்டான். ஏனென்றால் அவனுடைய கைகள் தேவனுடைய சிங்காசனத்தை நோக்கி இருந்தது.

இந்த பாடம் முக்கியமானது ஏனென்றால் ஜனங்கள் தேவனுடைய வாக்குதத்தத்தையும், முந்தைய தேவ விசுவாசத்தையும் எவ்வளவு சீக்கிரம் மறந்து போனார்கள் என்பதை காட்டுகிறது. அவர்களே தங்களுடைய சூழ்நிலைகளுக்கு பொறுப்பு எடுத்து கொள்ள முயற்சி செய்தார்கள்.

தேவனோ, நம்முடைய கடினமான நேரங்களில் நம்முடைய தலைவர்களை குறை சொல்வதை விட்டுவிட்டு, நாம் அவரையே முழுமையாக நம்பி உதவி கேட்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்.

இந்த பாடத்தின் மிக முக்கியமான உண்மை என்னவென்றால் தேவன் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராய் இருக்கிறார். நம்முடைய வாழ்க்கையின் எல்லா நேரத்திலும் அவரே நாம் முழுமையாக நம்பக்கூடிய அன்பான நல்ல தகப்பனாய் இருக்கிறார்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்

1. ஜனங்கள் இறைச்சி இல்லாததினால் முறுமுறுத்த போது தேவன் என்ன செய்தார்? (6 விநாடிகள் நிற்கவும்)

   ‘‘மாலையில் காடைகளை கூடாரத்திற்கு அனுப்பினார்’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. வானத்திலிருந்து தேவன் அனுப்பிய அப்பத்தின் பெயர் என்ன? (6 விநாடிகள் நிற்க)

   ‘‘அந்த அப்பத்திற்கு மன்னா என்று பெயர்’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. அமலேக்குடன் இஸ்ரவேலர் போரிட்ட போது, மோசே கன்மலையில் தன் கையை உயர்த்தி நின்றது எதை காட்டுகிறது? (5 விநாடிகள் நிற்க)

‘‘அவனுடைய நம்பிக்கை தேவன் மீது இருந்தது’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக்

கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள்.

நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தை பற்றி தெரியாத ஒரு நண்பருக்கு இதை கற்றுக் கொடுக்கவும். தங்களுடைய வாழ்க்கையின் சூழ்நிலைகளைப் பற்றி தேவனிடம் முறுமுறுத்து இருக்கீன்றீர்களா? என்று அவரிடம் கேட்கவும். தேவன் தம்முடைய விண்ணப்பதற்கு பதில் கொடுப்பார், என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவருடன் சேர்ந்து ஜெபிக்கவும்.

பின் தேவன் செய்த நன்மைக்காக முறுமுறுக்காமல், புலம்பாமல் ஸ்தோத்திரத்துடன் நன்றி செலுத்தவும்.

பாடம் முடிந்தது